எண்: 141 / 2025 நாள்: 17/10/2025

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

## செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண்: 10/2025) நேரடி நியமனத்திற்கான தேர்வுகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 31.08.2025 அன்று மற்றும் 07.09.2025 முதல் 27.09.2025 வரை பல்வேறு நாட்களில் நடத்தப்பட்டன.

ஓ.எம்.ஆர் (OMR) வகைத் தேர்வாக 31.08.2025 அன்று நடைபெற்ற தமிழ் தகுதித் தேர்வு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு பாடத்திற்கான வினாத்தாள் மற்றும் அதற்கான தோராய விடைகள் தேர்வாணைய இணைய தளத்தில் 30.09.2025 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டு தேர்வர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டன. மேலும் 22 பாடங்களுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணைய தளத்தில் 10.10.2025 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து எஞ்சிய கீழ்க்காணும் 24 பாடங்களுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணைய தளமான https://www.tnpsc.gov.in ல் இன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. Agriculture<br>வேளாண்மை | 431 |
| 2. Chemical Engineering and Technology<br>வேதிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் | 452 |
| 3. Civil Engineering<br>அமைப்பியல் பொறியியல் | 443 |
| 4. Handloom Technology,Textile Technology and Textile Manufacture<br>கைத்தறி தொழில்நுட்பம் துணிநூல் தொழில்நுட்பம் மற்றும் துணிநூல் உற்பத்தி | 445 |

| | |
|---|---|
| 5. Horticulture<br>தோட்டக்கலை | 432 |
| 6. Mechanical Engineering<br>இயந்திரப் பொறியியல் | 441 |
| 7. Mining Engineering<br>சுரங்கப் பொறியியல் | 346 |
| 8. Physical Education<br>உடற்கல்வியியல் | 354 |
| 9. Computer Hardware and Network Maintenance<br>கணினி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பு | 533 |
| 10. Diesel Mechanic<br>டீசல் கம்மியர் | 521 |
| 11. Draughtsman Civil<br>வரைவாளர் (சிவில்) | 388 |
| 12. Fashion Design and Technology<br>நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் | 570 |
| 13. Food Production (General)<br>உணவு தயாரிப்பு (பொது) | 536 |
| 14. In-Plant Logistics Assistant<br>ஆலையில் தளவாட உதவியாளர் | 569 |
| 15.Information and Communication Technology System Maintenance<br>தகவல் தொடர்பு தொழில்நுட்ப சாதனங்கள் பராமரிப்பு | 537 |
| 16. Sheet Metal<br>உலோகத்தகடு | 520 |
| 17.Manufacturing Process Control and Automation<br>உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம் | 543 |
| 18. Mechanic Auto Body Repair<br>கம்மியர் தானியங்கி வாகன பழுது பார்த்தல் | 541 |
| 19. Mechanic Electric Vehicle<br>கம்மியர் மின்சார வாகனம் | 542 |
| 20. Mechanic Two and Three Wheeler<br>கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம் | 553 |
| 21. Operator Advanced Machine Tools<br>மேம்பட்ட இயந்திர கருவி இயக்குபவர் | 544 |

| | |
|---|---|
| 22. Pump Operator cum Mechanic<br>**விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்** | 545 |
| 23. Solar Technician (Electrical)<br>**சூரிய சக்தி தொழிநுட்பவியலாளர் (மின்னியல்)** | 548 |
| 24. Welder (Gas and Electric)<br>**பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)** | 440 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 24 பாடங்களின் உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 24.10.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் தேர்வாணைய இணைய தளத்தில் உள்ள தேர்வுப்பலகையின் (Exam Dashboard) கீழ் “Answer key Challenge” என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணைய தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்